மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 95/2020

பெயர் : ராதாகிருஷ்ணன்
சாட்சி – வா.சா–1 நாள்: 25.02.2025

---

**குறுக்கு விசாரணை ( 1ம் பிரதிவாதி தரப்பு)**

1) நான் 11ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அப்பா கோவிந்தசாமியின் வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் எனது வழக்கறிஞர் சொல்லிதான் தெரியும் என்றால் சரியல்ல. எனக்கு நேரடியாக தெரியும். எனது தாயார் பெயர் பருவதாம்பாள் என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் அவிநாசிகவுண்டர் என்றால் சரிதான். எனது பாட்டி பெயர் பழனியம்மாள் ஆகும்.

2) எனது தகப்பனார் கோவிந்தசாமியுடன் உடன் பிறந்தவர்கள் விஸ்வநாதன், பெரியசாமி, சந்திரசேகர் மற்றும் பாலாமணி ஆகியோர் ஆவார்கள். எனது நிரந்தர முகவரி 4/105 வி கள்ளிபாளையம் அஞ்சல், பல்லடம் தாலுக்கா ஆகும். நான் பிறந்தது முதல் மேற்கண்ட முகவரியில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி முகவரியில் தான் எனது ஆதார் அட்டை, குடும்ப அட்டை மற்றும் இதர அடையாள அட்டைகள் உள்ளன என்றால் சரிதான்.

3) எனது தாத்தா அவிநாசிகவுண்டர் எங்கு எந்த தேதியில் இறந்தார் என்றால் தேதி நினைவு இல்லை, கள்ளிபாளையத்தில் 1979ம் ஆண்டு இறந்தார். அவிநாசிகவுண்டரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் கோவிந்தசாமி எங்கு இறந்தார் என்றால் 89 ஜே.கே.ஜே காலனி, 3வது தெரு, பாரதிபுரம், பல்லடம் என்ற முகவரியில் இறந்தார். எனது தகப்பனார் எங்கு வேலை பார்த்தார் என்றால் கோயமுத்தூர் மத்திய கூட்டுறவு வங்கி பல்லடம் கிளையில் வேலைபார்த்தார். பல்லடத்திற்கு எனது அப்பா எப்போது வந்தார் என்றால் 1982ம் ஆண்டு ஒரு வீடு வாங்கினார். அதன் பின்னர் பல்லடத்திலும், கள்ளிபாளையத்திலும் மாறி மாறி இருந்தார்.

4) எனது தாயார் பருவதாம்பாள் எப்படி இறந்தார் என்றால் உடல் நிலை சரியில்லாமல் இறந்தார். நாங்கள் எத்தனை பேர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன்

என்றால் நிர்மலாதேவி பெயரிலும், அதிகாரிகள் வாரிசு சான்றிதழ் வழங்காததால் அவர்கள் பெயரிலும் தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பா திருமணம் செய்த நாளிலிருந்து எனது தாயார் மனநிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. எனது அம்மாவிற்கு மன நிலை சரியில்லாமல் இருந்ததால் தான் எனது அப்பா நல்ல மருத்துவம் பார்த்தும் அவருக்கு குணமாகவில்லை என்றால் சரியல்ல.

5) நான் சிறிய வயதாக இருந்ததால் எனக்கு ஏதேனும் நல்லது செய்ய வேண்டும் என்பதற்காக எனது அப்பாவின் சகோதரர்கள் விஸ்வநாதன், பெரியசாமி, சந்திரசேகர் மற்றும் எனது மாமா சுப்பராயகவுண்டர் ஆகியோர் சேர்ந்து எனது அப்பாவிற்கு 1ம் பிரதிவாதியை 1980–ல் பழனி பாலதண்டாயுதம்பாணி கோவிலில் வைத்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல. திருமணம் செய்த பின்னர் 1ம் பிரதிவாதி ஒரு வருட காலத்திற்கு கள்ளிபாளையத்தில் எங்கள் குடும்பத்தினருடன் ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல. விஸ்வநாதன், பெரியசாமி, சந்திரசேகர், மற்றும் சுப்பராயகவுண்டர் ஆகியோர் சம்மதம் தெரிவித்து ஒரு திருமணம் செய்து வைப்பதற்காக ஆட்சேபணை இல்லா கடிதம் கொடுத்துள்ளார்கள் என்றால் இல்லை. நான் அந்த சமயத்தில் இளவாக இருந்ததால் எனது சார்பாக எனது காப்பாளர் என்ற முறையில் சுப்பராயகவுண்டர் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரியல்ல.

6) நானும் எனது அப்பாவும் சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். எனது அப்பா பெயரில் இருந்த சொத்துக்களை இருவரும் சேர்ந்து விற்று விட்டோம் என்றால் சரிதான். நான் அவருக்கு பாத்தியப்பட்ட பூமி கேட்டு வாங்கி கொண்டோன் என்றால் சரியல்ல. எனது அப்பா கிரையம் பெற்ற சொத்தினை 04.12.1992 தேதியில் 1ம் பிரதிவாதி பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்தார் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்தில் எனது அப்பா 1ம் பிரதிவாதி நிர்மலாதேவியை மனைவி என்று குறிப்பிட்டு தான் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் அவர் எனது அப்பாவின் மனைவியே கிடையாது. நிர்மலாதேவி பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்த விவரம் எனக்கு 1995ம் ஆண்டு தெரியும். 1995ம் ஆண்டே எனக்கு தெரிந்த பின்னரும், நான் எனது அப்பா மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எனது அப்பா பொது ஊழியர் என்பதால் அதன் மீது நடவடிக்கை எடுத்தால் அவரது வேலை போய்விடும் என்பதால்

பின்னர் பேசி தீர்த்து கொள்ளலாம் என்று விட்டுவிட்டேன். மேற்படி விபரத்தை எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

7) எனது அப்பா இறந்த பின்னர் இறுதி சடங்குகளை 89 ஜே.கே.ஜே காலனி, 3 வது தெரு, பாரதிபுரம், பல்லடம் என்ற முகவரியில் வைத்துதான் செய்தோம் என்றால் சரிதான். 1982ம் ஆண்டு எனது அப்பா மேற்படி 89 ஜே.கே.ஜே காலனி, 3 வது தெரு, பாரதிபுரம், பல்லடம் என்ற முகவரியில் உள்ள சொத்தினை வாங்கிய போது அவருடன் நான் இருந்துள்ளேன். நான் ஜே.கே.ஜே காலனியில் எனது அப்பாவுடன் வசித்து வந்தேன் என்று எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனது அப்பாவை முறைப்படி திருமணம் செய்து கொண்டு அவரது மனைவியாக வாழ்ந்து வந்தார் என்றும், வழக்கிற்காக அவரது மனைவியே இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மனைவி என்று தெரிந்த பின்னரும் அதனை மறைத்து நான் 3ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை ( 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தரப்பு)</u>

1) கோவிந்தசாமி கவுண்டரின் தாயார் பழனியம்மாளின் வாரிசு சான்றிதழ் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவிநாசிகவுண்டர் மற்றும் பழனியம்மாளின் வாக்காளர் அடையாள அட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கோவிந்தசாமியின் ஆதார் அடையாள அட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கோவிந்தசாமி மற்றும் பருவதாம்பாள் திருமணம் தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கோவிந்தசாமியின் வாரிசு சான்று வேண்டி 3ம் பிரதிவாதியிடம் முறையாக மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞர் மூலமாக கொடுத்துள்ளேன். அதற்கு 3ம் பிரதிவாதி குறிப்பாணை கொடுத்துள்ளார் என்றால் கொடுத்துள்ளார். அதில் என்ன சொல்லியுள்ளார் என்றால் நீதிமன்றம் மூலம் பார்த்து கொள்ளுமாறு சொல்லியுள்ளார். கோவிந்தசாமியின் இறப்பு சான்றிதழில் மனைவியின் பெயர் நிர்மலாதேவி என்று உள்ளது என்றால் சரிதான். அவர் மோசடியாக வாங்கியுள்ளார். எனது அம்மா கள்ளிபாளையம் முகவரியில் இருக்கும் போது தான் இறந்தார். கோவிந்தசாமி பெயரில் உள்ள சொத்து சம்மந்தமாக வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கோவிந்தசாமி இறப்பிற்காக வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழ் செல்லாது என நான் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

கோவிந்தசாமியின் திருமணம், வருவாய் ஆவணங்கள் மற்றும் அடையாள அட்டை ஆகியற்றை பற்றி எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததால் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>நீதிமன்ற விசாரணை</u>**

1) கோவிந்தசாமியின் பணி பலன்களை யார் வாங்கினார்கள் என்பது தெரியாது. அவரது ஓய்வூதியம் யார் வாங்குகிறார்கள் என்றால் எனது அம்மா எனது அப்பாவிற்கு முன்பாகவே இறந்துவிட்டதால் எனது அப்பாவிற்கு குடும்ப ஓய்வூதியம் கிடையாது.

**மறுவிசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.02.25 18:06:18 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.